**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2023 ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.808/2021

வா.சா.1 வசந்தி

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் கெமிக்கல் பிசினஸ் செய்து வருகிறேன். என்னுடைய நிறுவனமானது தனி நிறுவனமாகும். அலுவலக நிர்வாகத்தை நான் கவனித்து வருகிறேன், வாடிக்கையாளர்கள் சம்பந்தப்பட்ட நிர்வாகத்தை என் கணவர் கவனித்து வருகிறார். வாடிக்கையாளர்கள் பொருத்து என் கணவருக்கு மட்டும் தான் தெரியும், எனக்குத் தெரியாது. கடந்த சுமார் 30 வருடங்களாக தொழிலை பார்த்து வருகிறோம். பிரதிவாதி நிறுவனமானது பங்குதாரர் நிறுவனமாகும். பிரதிவாதி அவரது நிறுவனத்தில் ஒரு பங்குதாரர் ஆவார், இதர பங்குதாரர்கள் யார் என்றுத் தெரியாது. பிரதிவாதி உடைய நிறுவனத்தையும் மற்ற பங்குதாரர்களையும் தரப்பினராக இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் நிறுவனத்தையும், இதர பங்குதாரர்களையும் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்களுடன் 8,9 ஆண்டுகளாக வியாபாரம் செய்து வந்தார். எங்கள் நிறுவனத்தில் ரொக்கம் கொடுத்து கெமிக்கல்ஸ் வாங்குவார்களா, கடன் அடிப்படையில் வாங்குவார்களா என்றால் இரண்டு முறையிலும் கெமிக்கல்ஸ் வாங்குவார்கள். கடன் அடிப்படையில் கெமிக்கல்ஸ் கொள்முதல் செய்தால் 60 நாட்களுக்குள் அந்த கடனை தீர்க்க வேண்டும் என்பது நடைமுறை வழக்கம் என்றால் சரிதான். வாடிக்கையாளர் எங்களிடம் ஆடர் கொடுத்தால் அதை தனியாக நோட்டில் எழுதி வைத்து பராமரித்து வருகிறோம் என்றால் சரிதான். ஒவ்வொரு நிறுவனத்திற்கும் கெமிக்கல் சப்ளை செய்யும் போது டெலிவரி ஆடரில் கையெழுத்து பெற்றுக் கொண்டு சரக்கு அனுப்புவோம் என்றால் சரிதான். டெலிவரி ஆடரையும், ஆடர் நோட்டையும் தாக்கல் செய்யவில்லை என்றால் தேவைப்படும்பட்சத்தில் அதை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். இன்வாய்ஸ் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி 2018 ஜூலை மாதம் வரை என்னிடம்

வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். 2018 ஜூலை மாதம் வரை கெமிக்கல் சப்ளை செய்ததற்கு பிரதிவாதி தொகை செலுத்திவிட்டார், அதன் பிறகு தொகை செலுத்தவில்லை. 2018 ஜூலை மாதத்தில் நாங்கள் அனுப்பிய சரக்கின் தரத்தை பொருத்து பிரச்சனை ஏற்பட்டு பேச்சு வார்த்தை நடந்தது என்றால் சரியல்ல. பிரதிவாதி எங்கள் பொருள் மீது அதிருப்தி தெரிவித்தார் என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது. அதிருப்தியால் 2018 ஜூலை மாதத்துடன் என்னுடன் வரவு செலவு நிறுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல, 2018 டிசம்பர் மாதம் வரை எங்களுடன் வியாபாரம் செய்து வந்தார். 2018 ஜூலை மாதத்திற்கு பிறகு பிரதிவாதி எங்களுடன் வியாபாரம் செய்யாததால் தான் என்னால் டெலிவரி ரசீது மற்றும் ஆடர் புக் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியை எங்களுடன் வியாபாரம் செய்ய வேண்டும் என்று நிர்பந்தித்து வா.த.சா.ஆ. 2 முதல் 5 ஆவணங்கள் தயார் செய்து தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பிரதிவாதி 28.11.2020 தேதியில் என்னை சந்திக்கவில்லை, என் கணவரை சந்தித்தார். அந்த சந்திப்பில் பிரதிவாதியின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாது என்று தெரிவித்தார் என்றால் அதைப் பற்றி எனக்குத் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள இன்வாய்ஸ்கள் ஒவ்வொன்றும் 60 நாட்களுக்கு மேல்பட்ட காலத்திற்குண்டானது என்றும், எங்கள் நிறுவனத்தின் நிபந்தனைப்படி கடன் கொள்முதல் செய்தால் அந்த தொகையை 60 நாட்களுக்குள் செலுத்தினால் தான் அடுத்த கொள்முதல் செய்ய முடியும் என்றால் சரியல்ல, 60 நாட்களுக்குள் தொகை செலுத்தாதபட்சத்தில் அதற்கு 27 % வட்டி கணக்கீடு செய்து தொகை செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் தான் சரக்கு அனுப்பப்பட்டது. வழக்கில் கேட்டுள்ள தொகையானது வழக்குரையில் ஒவ்வொரு இடத்திலும் முன்னுக்கு பின் முரணாக தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.2 இன்வாய்ஸ்லில் கண்டுள்ள தொகைக்கும், வழக்குரையில் வட்டி கணக்கீடு செய்யப்பட்டுள்ள தொகைக்கு வித்தியாசம் உள்ளது என்றும், அதன் அடிப்படையில் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையின் விபரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் படித்து தெரிந்து கொண்டேன். எதிர் வழக்குரைக்கு நான் பதில் உரை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.2 முதல் 5 வரையிலான இன்வாய்ஸ் போலியானது என்றும், அதில் கண்டுள்ள தொகையை பிரதிவாதி செலுத்த வேண்டியதில்லை என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே தொழில் சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு 2018 ஜூலை மாதமே என்னிடம் தொழில் செய்வதை

நிறுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.8 வங்கி கணக்கு விபரங்கள் என்னால் தயார் செய்யப்பட்டது என்றும், அது போலியானது என்றால் சரியல்ல. வழக்குரையில் கோரியுள்ள வட்டி விகிதம் மிகவும் அதிகமானது என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கு இடையே தொழில் சம்பந்தமாக எந்த ஒரு வரவு செலவும் இல்லை என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:-** இல்லை